முதன்மை சார்பு நீதிமன்றம் -திருச்செங்கோடு
முன்னிலை. திரு. D.மோகன்குமார், B.Com., M.L.,
முதன்மை சார்பு நீதிபதி, திருச்செங்கோடு
2025 ம் ஆண்டு மார்ச் திங்கள் 07-ம் நாள் வெள்ளிக்கிழமை
IA. No. 04/2024 in O.S.No.285/2008

01. ராமசாமி
02. தனபால் ...மனுதாரர்கள்/வாதிகள்

/எதிராக/

01. செல்லாயி (இறந்தார்)
02. துளசி
03. பழனியப்பன்(இறந்தார்)
04. காளியம்மாள்(இறந்தார்)
05. துரைசாமி
06. அத்தியப்பகவுண்ர்(இறந்தார்)
07. அருணாசலம்(இறந்தார்)
08.சுப்ரமணியன்
09.அத்தாயி(இறந்தார்)
10. பாவாயி(இறந்தார்)
11.செல்லம்மாள்
12.குமாரசாமி
13. சின்னுசாமி
14. ராஜேந்திரன்
15. பெங்கியண்ணகவுண்டர்(இறந்தார்)
16. பழனியப்ப கவுண்டர்
17. சந்திரமதி
18. சண்முகம்
19. கனகராஜ்
20.பழனியப்பன்
21.சாந்தாமணி
22,ராமசாமி
23.வடிவேல்
24.கண்ணம்மாள் (எ) பாவாயி
25. பத்மினி
26. பாவாயி
27. வல்லவ கணேசன்
28. காஞ்சனாதேவி
29. சின்னம்மாள்
30. செல்வி
31. கவிதா ….. ...எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

32. ராமகிருஷ்ணன்
33. கமலசேகரன் ...எதிர்மனுதாரர்கள் /உத்தேச தரப்பினர்கள்

இம்மனு என் முன்னர் கடந்த 05.03.2025-ம் தேதி அன்று இறுதியான விசாரணைக்கு கொண்டு வரப்பட்டு, மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.என்.ராஜகோபாலன் அவர்கள் முன்னிலையாகியும், 2,8,18 ஆகிய எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.எஸ்.பழனிவேலு அவர்கள் ஆஜராகியும், போதிய கால அவகாசம் தரப்பட்டும் எதிருரை தாக்கல் செய்யாததால் ஒருதலைபட்சமாக்கப்பட்டுள்ளார்கள். 32 மற்றும் 33

எதிர்மனுதாரர்கள்/உத்தேசதரப்பினர்கள் அழைத்தும் ஆஜராகாகததால் தோன்றாத் தரப்பினராக்கப்பட்டும், மனுதாரர் தரப்பில் முன்னிடப்பட்ட வாதுரை, சாட்சி மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்து இதுநாள் வரை என் பரிசீலனையில் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

<u>உ த் த ர வு</u>

உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 22 விதி 4 மற்றும் பிரிவு 151 ன் கீழ் மனுவில் உத்தேசதரப்பினர்களை சேர்க்க வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>2) மனுதாரர் தரப்பு மனுவின் சுருக்கம்</u>

மனுதாரர்கள் அசல் வழக்கில் வாதிகள். மேற்படி வழக்கானது பாகப்பிரிவினை மற்றும் நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்ட வழக்காகும். 21-ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி சாந்தாமணி அவரின் சட்டப்படியான வாரிசுகளான அவரின் கணவர் மற்றும் மகன் ஆகிய உத்தேச தரப்பினர்களை வாரிசாக விட்டுவிட்டு இறந்துவிட்டார். அவர்களை இந்த வழக்கில் தரப்பினர்களாக சேர்க்க அனுமதி வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. எதிர்மனுதாரர்கள் தரப்பில் போதிய அவகாசம் தரப்பட்டும் எதிருரை தாக்கல் செய்யாத காரணத்தினால் ஒருதலைபட்சமாக்கப்பட்டுள்ளனர்.

4. மனுதாரர் தரப்பில் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை, சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

5) மனுதாரரின் மனு, மற்றும் ஆவணங்கள் ஆகியவற்றை பரிசீலனை செய்து இந்நீதிமன்றம் தீர்மானிக்க வேண்டிய சங்கதி என்னவென்றால் இந்த மனு அனுமதிக்கத்தக்கதா? அல்லது இல்லையா? என்பதாகும்.

6) <u>தீர்வு</u>

(i) மனுதாரர் அசல் வழக்கில் வாதியாவார்கள். மேற்படி வழக்கானது பாகப்பிரிவினை மற்றும் நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்ட வழக்காகும். 21-ம் பிரதிவாதி சாந்தாமணி இறந்துவிட்டதால் அவரின் சட்டப்படியான வாரிசுகளாக இந்த மனுவில் 32,33ம் உத்தேச தரப்பினர்களை பிரதிவாதிகளாக சேர்க்கவேண்டும் என்பதற்காக இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்சொன்ன சாந்தாமணியின் வாரிசுகள் தான் இந்த உத்தேச தரப்பினர்கள். இந்த மனு சார்ந்த வழக்கானது பாகப்பிரிவினை வழக்கு என்பதால் அது தொடர் நிகழ்வு வழக்கெழு மூலம் கொண்டது. மேலும், பாகப்பிரிவினை வழக்குகளில் தாவா சொத்திற்கு சம்பந்தப்பட்ட அனைத்து நபர்களும் தரப்பினர்களாக சேர்க்கப்படவேண்டும். இந்த மனுவில் சொல்லப்பட்டுள்ள உத்தேச தரப்பினர்கள் காலம் சென்ற சாந்தாமணியின் வாரிசுகள் அல்ல என்று மறுக்கப்படவில்லை. எனவே, அவர்கள் வழக்கை தீர்மானிப்பதற்கு அவசியமான தரப்பினர்கள் ஆவார்கள். வழக்காவணங்களை பரிசீலிக்கையில், இந்த மனு சார்ந்த வழக்கானது சுமார் 11 வருடங்களுக்கு மேலாக நிலுவையில் இருந்து வருகிறது. மேலும் எதிர்மனுதாரர்களான உத்தேசதரப்பினர்கள் நீதிமன்றத்தில் ஆஜராகி எதிர்வியாஜிதம் செய்யவில்லை. எனவே நீதியின் நலன் கருதி வழக்கினை

விரைவாக முடிக்கவேண்டும் என்ற எண்ணத்தில் மேற்சொன்ன உத்தேச தரப்பினர்களை பிரதிவாதிகளாக சேர்க்க தாக்கல் செய்யப்பட்ட இந்த மனு அனுமதிக்கப்படுகிறது.

இறுதியாக, இந்த மனு அனுமதிக்கப்படுகிறது. செலவு தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் நேரடியாக சுருக்கெழுத்து - தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு பின்னர் 2025 ஆண்டு மார்ச் திங்கள் 07-ம் நாள் இன்று திறந்த நீதிமன்றத்தில் உத்தரவு அவையறிய பகரப்பட்டது.

D MOHANKUMAR

Digitally signed by D MOHANKUMAR
Date: 2025.03.07 18:07:33 +0530

முதன்மை சார்பு நீதிபதி,
திருச்செங்கோடு.

<u>இருதரப்பு எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u> - இல்லை.

D MOHANKUMAR

Digitally signed by D MOHANKUMAR
Date: 2025.03.07 18:07:25 +0530

முதன்மை சார்பு நீதிபதி,
திருந்செங்கோடு.

சார்பு நீதிமன்றம்,
திருச்செங்கோடு.
அசல்/வரைவு/உத்தரவு
இ.ம.எண். 4/2024- ன்
அ.வ.எண். 285/2008
நாள். 07.03.2025